செ.வெ.எண்: 398

## பத்திரிக்கை செய்தி குறிப்பு

இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையால் தேசிய அனுமதிச் சீட்டு வாகனங்களின் வரி செலுத்தும் முறையை எளிதாக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பேரில் தேசிய அனுமதிச்சீட்டு வாகனங்கள் சொந்த மாநிலம் தவிர்த்து ஏனைய மாநிலம் ஒன்றிற்கு ரூ. 5,000/- செலுத்தி மூன்று மாநிலங்களில் மட்டும் இயக்குவதற்குப் பதிலாக, ரூ.15,000/- செலுத்தி, இந்திய நாடு முழுவதும் இயக்கத்தக்க அங்கீகாரம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 16.04.2010 அன்று நடந்த போக்குவரத்து மேம்பாட்டு குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மத்திய மோட்டார் வாகன விதிகளில் உரிய திருத்தம் செய்து 07.05.2010ல் மத்திய அரசின் அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

தமிழக அரசும், இப்புதியத்திட்டத்தை ஏற்று, பிறமாநில தேசிய அனுமதி வாகனங்களுக்கு விதித்திருந்த ஆண்டு ஒன்றிற்கான வரி ரூ.5,000/-த்தை 14.05.2010 முதல் விலக்கிக் கொண்டு மத்திய அரசு அறிவித்துள்ளவாறு வாகனம் ஒன்றிற்கு, ஆண்டு ஒன்றிற்கு ரூ.15,000/- பெற்று அகில இந்திய தேசிய அனுமதி சீட்டு வழங்க அறிவிக்கை வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் ரூ.15,000/- செலுத்தி அனுமதிச் சீட்டு பெற்றுக் கொள்ளும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே தேசிய அனுமதிச் சீட்டு நடப்பில் உள்ள அனுமதிச் சீட்டுதாரர்கள் அவர்களின் அங்கீகாரம் நடப்பில் உள்ள காலம் வரை வாகனங்களை இயக்கிக்கொள்ளலாம். அவர்கள் புதிய முறைக்கு மாற விரும்பினால் அனுமதிச் சீட்டினை சரண் செய்து புதிய அனுமதி பெற்றுக் கொள்ளலாம்.

இந்த புதிய முறை தமிழ் நாட்டில் 17.05.2010 முதல் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வாகன உரிமையாளர்களுக்குரிய தேசிய அனுமதிச் சீட்டை மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் 18.05.2010 அன்று வழங்கி கொடியசைத்து வாகன இயக்கத்தை தொடங்கி வைக்கிறார்.

முதன்மைச் செயலர் /
போக்குவரத்து ஆணையர்
சேப்பாக்கம், சென்னை-5.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9